செ.வெ.எண்.08 நாள்.04.07.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் ரூ.**6.90** கோடி மதிப்பிலான காவலர் குடியிருப்பு, காவல் நிலையங்கள், தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகம் ஆகிய கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் திருநெல்வேலி மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்ட பணிகளான விக்கிரமசிங்கபுரம் ஆயுத படை வளாகத்தில் 41 காவல்துறை குடியிருப்பு கட்டிடங்கள் ரூபாய் 4.97 கோடி **மதிப்பீட்டிலும்,** திசையன்விளையில் ஒரு காவல்நிலையம், உவரியில் ஒரு காவல்நிலையம் ஆக மொத்தம் இரண்டு காவல் நிலையங்கள் ரூபாய் 1.26 கோடி **மதிப்பீட்டிலும்,** திருநெல்வேலியில் தனிபிரிவு குற்ற புலனாய்வு துறை அலுவலக கட்டிடம் ரூபாய் 66.02 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் ரூபாய் 6.90 கோடி மதிப்பீட்டிலான திட்டபணிகளை **துவக்க நிகழ்ச்சி இன்று (04.07.2017) நடைபெற்றது.**

இந்த புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்கள்.

திருநெல்வேலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.பெ.வே.அருண் சக்தி குமார்,இ.கா.ப., அவர்கள் ஆகியோர் புதிய கட்டடங்களை திறந்து வைத்தமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்தனர்.

தொடர்ந்து, விக்கிரமசிங்கபுரம் காவலர் குடியிருப்பு பயனாளி தலைமைக் காவலர் திரு.ஜான்சன் காவலர் குடியிருப்பினை திறந்து வைத்தமைக்கு நன்றி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் திருமதி.விஜிலா சத்தியானந்த், தென்னக ரயில்வே ஆலோசனைக் குழு உறுப்பினர் திரு.பாப்புலர் வி.முத்தையா, காவலர் வீட்டுவசதி வாரிய கண்காணிப்பு பொறியாளர் திரு.செந்தில்குமார், செயற்பொறியாளர் திரு.சேகர், உதவி செயற்பொறியாளர்கள் திரு.ஜெயசங்கர், திரு.திருமலைச்சாமி, திரு.குமரேசன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.